**தேனி மாவட்டம்.**

**உலக மக்கள் தொகை தினம் 2021–ஐ முன்னிட்டு, விழிப்புணர்வு உறுதிமொழி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க.வீ.முரளீதரன், இ.ஆ.ப., அவர்கள், தலைமையில் ஏற்கப்பட்டு, விழிப்புணர்வு ரதம் துவக்கி வைக்கப்பட்டது:-**

*******

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (12.07.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க.வீ.முரளிதரன், இ.ஆ.ப., அவர்கள், தலைமையில், உலக மக்கள் தொகை தினம் 2021- ஐ முன்னிட்டு விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்கப்பட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் விழிப்புணர்வு ரதம் துவக்கி வைக்கப்பட்டது.

உலக மக்கள் தொகை 1987 ஜுலை 11-ல் 500 கோடியை தாண்டியதை தொடர்ந்து, அதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் ஜுலை 11-ஐ உலக மக்கள் தொகை தினமாக ஐ.நா. சபையால் அறிவிக்கப்பட்டு அனுசரிக்கப்படுகிறது. 2011-இல் இந்திய மக்கள் தொகை 139 கோடியாகவும், தமிழக மக்கள் தொகை 2011-ல் 7.21 கோடியாக இருந்தது. தற்போது 2021-ல் 8.50 கோடியாக உயர்ந்துள்ளது. தேனி மாவட்ட மக்கள் தொகை 2011-ல் 12,45,899 ஆகவும், 2021-இல் 13,16,509 ஆக உயர்ந்துள்ளது.

மக்கள் தொகை பெருக்கத்தால் ஏற்படும் பிரச்சனைகள் மற்றும் சிறு குடும்பநல நெறி அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திட தமிழக அரசால் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இளம் வயது திருமணம் தடுத்தல், முதல் குழந்தை தள்ளிப்போடுதல், குழந்தைகள் இடையே போதிய இடைவெளி, குடும்பநலத் திட்டத்தில் ஆண்களின் பங்களிப்பு, பிரசவம் மற்றும் கருக்கலைப்புக்கு பின் குடும்பநல முறைகளை அனுசரித்தல் உள்ளிட்ட விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

இந்த ஆண்டு உலக மக்கள் தொகை தினம் ‘தன்னம்பிக்கையும், தற்சார்பும் கொண்டு, நம் நாட்டு மக்களுக்கு நெருக்கடியான சூழலிலும் குடும்பநல திட்ட சேவை வழங்குவதை உறுதி செய்வோம்” என்ற கருப்பொருளின் அடிப்படையில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. தேனி மாவட்ட குடும்பநலத்துறை மற்றும் பொது சுகாதார துறை சார்பில் இரு வார விழா தற்சமயம் முதல் ஜுலை 24-ந்தேதி வரை நடத்தப்படுகிறது.

மேலும், தேனி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, அனைத்து அரசு மருத்துவமனைகள், அனைத்து வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிறப்பு குடும்பநல அறுவை சிகிச்சை மற்றும் பிற தற்காலிக குடும்ப வழி முறைகள் பற்றிய முகாம்கள் தற்சமயம் முதல் வருகின்ற ஜுலை 24 வரை நடைபெற உள்ளது.

தேனி மாவட்டத்தில் உலக மக்கள் தொகை தினம் 2021-ஐ முன்னிட்டு, இன்றைய தினம் (12.07.2021) தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியரகத்தில் உறுதிமொழி எடுக்கப்பட்டு, குடும்பநல விழிப்புணர்வு ரதம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் கொடியசைத்து துவக்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ராஜா, இணை இயக்குநர் (நலப்பணிகள்) மரு.லெட்சுமணன், துணை இயக்குநர் (குடும்ப நலம்) மரு.அசோகன், மாவட்ட விரிவாக்க கல்வியாளர் முருகன், வட்டார சுகாதார புள்ளியலாளர் சுகுமாறன், மாவட்ட குடும்ப நல அலுவலக பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**